DEPOSITION OF WITNESS
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )
**O.S.No. 135/2019**

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : ஆறுமுகம் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 07.04.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 7th April 2026

**முதல்விசாரணை :**

நான் இவ்வழக்கில் 3ம் வாதி ஆவேன். நான் இன்று இந்த வழக்கில் எனக்காகவும், மற்ற வாதிகளுக்காகவும் சேர்த்து எனது சத்தியபிரமாண நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது முதல் தரப்பு விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

1. 04.11.2013 தேதியிட்ட வாதிகள் பிரதிவாதிகள் பெயரில் அளித்த நம்பிக்கை கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. வாதிகளின் குடும்ப அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டதை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. வாதிகளின் பிறப்பிடச்சான்று கணினி நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கில் நாங்கள் கோரும் பரிகாரம் வழங்கிடப் பிரார்த்திக்கிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**